# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, (கல்வியியல் கல்லூரி)**

**தஞ்சாவூர் - 613 010, தமிழ்நாடு**

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் B+ தரம் பெற்றது

## *இரண்டாண்டு இளங்கல்வியியல் (B.Ed.,) பட்டப்படிப்பு*
## *முழுநேரம் – சேர்க்கை*
## *மற்றும்*
## *இரண்டாண்டு கல்வியியல் நிறைஞர் (M.Ed.,) பட்டப்படிப்பு*
## *முழுநேரம் – சேர்க்கை*

---

**விண்ணப்பப் படிவம் மற்றும் சேர்க்கைக் கையேடு - 2025-2026**

Application form and Prospectus - **2025-2026**

---

Two-Year B.Ed., / M.Ed., Degree Course (Full Time)

Offered in Tamil University

---

**பதிவாளர் பிரிவு** : 04362-226720

**சேர்க்கைத் தொடர்பிற்கு** : 7502177760

***www.tamiluniversity.ac.in***

விலை ரூ.600/- மட்டும்

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

## இளங்கல்வியியல்(B.Ed.,) / கல்வியியல் நிறைஞர் (M.Ed.,) - (முழுநேரம்) பட்டப் படிப்பு

## சேர்க்கைக் கையேடு (PROSPECTUS)

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை,அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக 1981 ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15ம் நாள் தொடங்கப்பெற்றது.தஞ்சை –திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ.தொலைவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) அங்கீகாரத்தைப் பெற்று இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களில் இருப்பத்தாறு துறைகளுடன் இயங்கி வருகின்றது.

### வசதிகள்

- தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு நூலகம்
- இணைதள வசதி (WiFi)
- வேலை வாய்ப்பு வழிகட்டி மையம்
- மாணவர் குறைதீர் மையம்
- இரு பாலருக்கான தனித்தனி விடுதி வசதி
- பட்டியல் / பழங்குடி இனத்தவர் / பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை
- பின் தங்கிய பட்டியலின / பழங்குடி இன மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி
- கல்வியல் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு அரசு கல்வி உதவித்தொகை
- தமிழ்மொழியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு விதிப்படி வேலைவாய்ப்பு பெற தமிழ் வழியில் பயின்ற சான்றிதழ் அளிக்கப்படும்.
- பட்டப் படிப்புடன் கூடுதலாகப் பகுதி நேரத்தில் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் படிக்கும் வசதி
- மத்திய, மாநிலப் பணிக்கான தேர்வுகளை எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள்
- ஆசிரியர் தகுதித்தேர்வு (TET) மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் வழங்கப்படும் தேசிய தகுதித்தேர்வு/ மாநிலத் தகுதித் தேர்விற்கான கட்டணமில்லாப் பயிற்சி (NET/SET/CSIR/ICHR)
- யோகா பயிற்சி
- மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம், தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம்.
- நாட்டு நலப்பணித் திட்டம்

## I **கல்வியியல் துறை (Department of Education)**

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை (கல்வியியல் கல்லூரி) 2007-2008 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின்(NCTE) அறிந்தேற்புப் பெற்றது. இதில் இளங்கல்வியியல் இரண்டாண்டு மற்றும் கல்வியியல் நிறைஞர் இரண்டாண்டு முழுநேரப் பட்டப்படிப்பு இரு பாலருக்கும் வழங்கப்படுகிறது. தற்பொழுது, இளங்கல்வியியல் இரண்டு ஆண்டு பட்டப்படிப்பிற்கான (OBE) விளைபயன் பாடத்திட்டம் 2020-21 ஆம் கல்வியாண்டு முதல் பருவத் தேர்வு முறை நடைமுறையில் உள்ளது. நன்கு வசதி படைத்த ஆய்வகங்கள் மற்றும் நூலகம் உள்ளன. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனுமதியோடு மாவட்டங்களில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பான முறையில் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்படுகிறது. உடற்கல்வி, சமூகப்பணி, களப்பணி போன்ற பாட இணைச்செயல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு வழிகாட்டி மையத்தின் மூலம் வளாக நேர்காணலில் (Campus Interview) இளங்கல்வியியல் மாணவ ஆசிரியர்கள் தெரிவுச் செய்யப்பட்டு பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய மாணவ ஆசிரியர்கள் உயர்கல்வியைத் தொடர்கின்றனர்.

## II **கல்வியியல் துறையில் கீழ்வரும் படிப்புகள் உள்ளன**

1. **இளங்கல்வியியல் பட்டம் – முழுநேரம்**
2. **கல்வியியல் நிறைஞர் பட்டம் – முழுநேரம்**
3. **முனைவர் பட்டம் (கல்வியியல்) – முழுநேரம்/ பகுதி நேரம்**

### 1. **இளங்கல்வியியல் பட்டம் (B.Ed.,) முழுநேரம்(Regular)**

- **கால அளவு**

  இளங்கல்வியியல் பட்டப்படிப்பிற்கான கற்கும் கால அளவு 4 பருவங்களைக் கொண்ட இரண்டு வருட கல்வியாண்டு ஆகும். ஒரு கல்வி ஆண்டிற்கு மொத்தம் 200 வேலை நாட்கள் (1 வாரத்திற்கு 30 மணி நேரம்) சேர்க்கை மற்றும் தேர்வு தவிர்த்து. அதாவது, ஒரு பருவத்திற்கு 100 வேலை நாட்கள் கால அளவாக கருதப்படும்.

- **கற்பித்தல் மொழி**

  இளங்கல்வியியல் பாடம் தமிழ் வழியில் கற்பிக்கப்படும்.

- **இடஒதுக்கீடு**

  தமிழக அரசின் இடஒதுக்கீட்டு விதி முறைகளின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும். அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் இட ஒதுக்கீட்டு முறைகள் பின்பற்றப்படும்.

## III இளங்கல்வியியல் பட்டப் படிப்பில் சேருவதற்குரிய பாடங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் கீழ்க்காணும் பாடப் பிரிவுகளில் சேர்க்கை நடைபெறும்.

| முதன்மைப் பாடக் குறியீட்டு எண் | பாடம் |
|---|---|
| 01 | தமிழ் |
| 02 | ஆங்கிலம் |
| 03 | கணிதம் |
| 04 | பொருளறிவியல் (இயற்பியல்,வேதியியல்) |
| 05 | உயிரறிவியல் (விலங்கியல், தாவரவியல்) |
| 06 | வரலாறு |
| 07 | புவியியல் |

அ) இளநிலை பட்டப்படிப்பில் பள்ளிப் பாடங்களை பயின்றோர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியுடையவர் ஆவார்.

ஆ) கீழ்க்காணும் இளநிலை பட்டம் பெற்ற மாணவர்களும் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பி.எட்., விருப்பப் பாடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| தமிழ்<br>மொழியியல் | – தமிழ் (Tamil ) |
| ஆங்கிலம் | – ஆங்கிலம் (English ) |
| பயன்பாட்டுக் கணிதம் (Applied Mathematics) | – கணிதம் (Mathematics) |
| பயன்பாட்டு இயற்பியல் (Applied Physics)<br>உயிர் இயற்பியல் (Bio Physics)<br>புவி இயற்பியல் (Geo Physics)<br>மின்னனுவியல் (Electronics)<br>பயன்பாட்டு வேதியியல் (Applied Chemistry) | – பொருளறிவியல் (Physical Science) |
| தாவர உயிர்நுட்பவியல் (Plant Bio-Technology)<br>உயிர்நுட்பவியல் (Bio-Technology)<br>தாவர உயிரியல் (Plant Biology)<br>நுண்ணுயிரியியல் (Micro Biology)<br>சுற்றுச்சூழல் அறிவியல் (Environmental Science)<br>வேளாண் அறிவியல் (Agricultural Science) | - உயிரறிவியல் (Biological Science) |
| பயன்பாட்டுப் புவியியல் (Applied Geography) | – புவியியல் (Geography) |
| இந்தியப் பண்பாடு (Indian Culture) | - வரலாறு (History) |

இ) விண்ணப்பதாரர் கணிதம், அறிவியல் மற்றும் பிறப்பாடங்களைச் சிறப்புப் பாடமாகக் (Specialisation) கொண்டு, பொறியியல் (B.E.,) அல்லது தொழில்நுட்பவியலில் (B.Tech.,) இளநிலைப் பட்டம் பெற்றிருப்பின், அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதி உடையவராவார். பொறியியல் அல்லது தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு, அவர்கள் அப்பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் தகுதிக்குரிய மதிப்பெண்களாக எடுத்துக் கொள்ளப்படும். மேலும், அவர்கள் பொறியியல் பட்டப்படிப்பில் பயின்ற பாடங்களுக்கேற்ப விருப்பப்பாடங்கள் அளிக்கப்படும்.

## IV இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேருவதற்குத் தேவையானக் கல்வித்தகுதிகள்

கீழ்க்காணும் தகுதியுள்ளவர்கள் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேர்ந்து படிப்பதற்கு தகுதி பெற்றவர் ஆவார்.

1. 10 + 2 + 3 (15) அல்லது 11 + 1 + 3 (15) என்ற கல்வி முறையில் பயின்றவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். தமிழ்நாடு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்களுள், ஏதேனும் ஒரு பாடத்தில் இளங்கலைப் பட்டம் அல்லது முதுகலைப்பட்டம் அல்லது பி.லிட்., பட்டம் பெற்று இருக்க வேண்டும். ஒரு பாடத்தில் முதுகலை பட்டம் பெற்ற ஒருவர் அதே பாடத்தை இளங்கலையில் பகுதி III இல் படித்திருக்கவேண்டும்.

2. விண்ணப்ப தாரர் 10+2 என்ற முறையில் தேர்ச்சிப் பெற்று இளங்கலை பட்டப்படிப்பை திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் படித்திருந்தால் அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேர தகுதியுடையவர் ஆவார்.
   - இளங்கலை பட்டப்படிப்பிற்கு பின் (10+2) தேர்ச்சிப் பெற்றிருப்பின் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியற்றவர் ஆவார்.

3. விண்ணப்பதாரர் இளநிலைப் பட்டப்படிப்பில் இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களைப் (Double or Triple Major) பயின்றிருந்தால் அவற்றுள் ஏதேனும் ஒரு முதன்மைப் பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவார். விண்ணப்பத்தில் தெரிவு செய்யும் முதன்மைப்பாடத்தின் மதிப்பெண்கள் சராசரி மட்டுமே தரவரிசைக்கு உட்படுத்தப்படும்.

4. விண்ணப்பதாரர் 10 +2 + 5 என்ற கல்வி முறையிலோ, 11 + 1 + 5 என்ற கல்வி முறையிலோ 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டத்தை (5 Year Integrated Programme) பயின்று தேர்ச்சி பெற்றிருப்பின் அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியுடையவர் ஆவார். அவ்வாறு சேருவதற்கு, அவர் முதல் மூன்று ஆண்டுகளில் பயின்ற முதன்மை மற்றும் துணைப்பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. கீழ்க்காணும் இனவாரியான குறைந்தபட்ச மதிப்பெண் விழுக்காடு பெற்றவரே சேரத் தகுதிப் பெற்றவர் ஆவார்.

| இனம் | மதிப்பெண் விழுக்காடு |
|---|---|
| OC | 50% |
| BC / BC(M) | 45% |
| MBC / DNC | 43% |
| SC / SC(A) / ST | 40% |

6. விண்ணப்பதாரர் இளநிலைப் பட்டப்படிப்பில் மூன்று ஆண்டுகளிலும் பெற்ற முதன்மை (பகுதி–III) மற்றும் துணைமைப் (பகுதி–IV) பாடங்களின் எழுத்து மற்றும் செயல்முறைத் தேர்வு மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விழுக்காட்டினை

விண்ணப்பத்தில் குறிக்க வேண்டிய இடத்தில் நான்கு இலக்கப் பின்னங்களில் தெளிவாக எழுத வேண்டும். சதவிகிதமாக கணக்கிடும்போது தசமத்திற்கு பிறகு வரும் எண்களை ஒதுக்கி முழு எண்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். (எ.கா: 75.1617)

7. மாற்றுத் திறனாளி உடல் மற்றும் பார்வை குறைபாடு உடையோர் விண்ணப்பதாரர் இளநிலைப் பட்டத்தில் குறைந்தபட்ச தேர்ச்சிப் பெற்றிருத்தல், இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரப் போதுமானதாகும்.

8. விண்ணப்பதாரர் ஓர் ஆண்டு இடைநிலைக் கல்வி (SSLC) மற்றும் ஓர் ஆண்டு பல்கலைக்கழக முன்படிப்பு (PUC) படித்திருந்தாலும் 10 + 2 என்ற கல்வி முறையில் தேர்ச்சி பெறாமலோ அல்லது அவர் 11 ஆண்டுகள் இடைநிலைக் கல்வி மற்றும் ஓர் ஆண்டு பல்கலைக்கழக முன்படிப்பு பயிலாமலோ இளநிலை அல்லது முதுநிலை பட்டப்படிப்பு திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் படித்திருந்தால் அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியற்றவர் ஆவார்.

9. விண்ணப்பதாரர் கூடுதல் பட்டப்படிப்பினை (Additional Degree Programme) 3 ஆண்டுகளுக்கு குறைவான தேர்ச்சிப் பெற்றிருப்பின் அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியற்றவர் ஆவர்.

10. விண்ணப்பதாரர் பகுதி III இல் இரு முதன்மை பாடங்களைக் கொண்டு, நான்காண்டு இரு பட்டங்களை (Four Year Dual Degree Programme) பெற்றிருப்பின் அவர் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் சேரத் தகுதியற்றவர் ஆவார்.

## V கல்வியியல் நிறைஞர் பட்டம்(M.Ed.,) முழுநேரம்(Regular)

### கல்வியியல் நிறைஞர் சேர்க்கைக்கான கல்வித் தகுதிகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டப் படிப்புடன் இளங்கல்வியியல் பட்டத் தேர்வில் (B.Ed.,) 50% விழுக்காட்டிற்கு (செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வில்) குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

- **கால அளவு**
  கல்வியியல் நிறைஞர் பட்டப்படிப்பிற்கான கற்கும் கால அளவு இரண்டு வருட கல்வியாண்டு ஆகும். ஒரு கல்வி ஆண்டிற்கு மொத்தம் 200 வேலை நாட்கள் (1 வாரத்திற்கு 30 மணி நேரம்) சேர்க்கை மற்றும் தேர்வு தவிர்த்து.

- **கற்பித்தல் மொழி**
  கல்வியியல் பாடம் தமிழ் வழியில் கற்பிக்கப்படும்.

- **இடஒதுக்கீடு**
  தமிழக அரசின் இடஒதுக்கீட்டு விதி முறைகளின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும். அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் இட ஒதுக்கீட்டு முறைகள் பின்பற்றப்படும்.

## VI இளங்கல்வியியல் மற்றும் கல்வியியல் நிறைஞருக்கான கூடுதல் மதிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| முதுநிலைப் பட்டம் (P.G) | - | 4 மதிப்பெண்கள் |
| ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.,) | - | 5 மதிப்பெண்கள் (4+1) |
| முனைவர் பட்டம் (Ph.D.,) | - | 6 மதிப்பெண்கள் (5+1) |

- ஒருவருக்கு உயர்கல்வித் தகுதிக்குரிய கூடுதல் மதிப்பெண்ணாக அதிக அளவு **ஆறு** மதிப்பெண்கள் மட்டுமே அளிக்கப்படும்.

- இளநிலைப் பட்டப்படிப்பில் முதன்மைப் பாடமாகக்கொண்டு பயின்ற, அதே பாடத்தில் உயர்கல்வித் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே மேற்கண்டவாறு கூடுதல் மதிப்பெண் வழங்கப்படும்.

- கீழ்க்காணும் பாட இணைச் செயல்களில் (Co-Curricular Activities) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் கூடுதலாக மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும்.

அ. கல்லூரி பல்கலைக்கழக அளவில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நாட்டு நலப்பணித் திட்ட (NSS) உறுப்பினராக இருந்ததுடன் 7 நாட்கள் சிறப்பு முகாமில் கலந்து கொண்டமைக்கானச் சான்று.

ஆ. என்.சி.சி (NCC) கல்லூரி அளவில் பி அல்லது சி சான்று (B or C Grade) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

இ. கல்லூரி பல்கலைக்கழகத்தில் பயின்றபோது மாநில அல்லது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றமைக்கானச் சான்று.

## VII இளங்கல்வியியல் (B.Ed.,) / கல்வியியல் நிறைஞர் (M.Ed.,)

### 2025-2026 ஆம் கல்வியாண்டு சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம்

2025-2026 ஆம் கல்வியாண்டில், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் பி.எட்., மற்றும் எம்.எட்., முழுநேரம் இரண்டாண்டு பட்டப்படிப்பிற்கு இரு பாலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சேர்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் 05.05.2025 முதல் 31.07.2025 வரை அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையில் வழங்கப்படும்.

விண்ணப்பத்தினை நேரில் பெற விரும்புவோர் ரூ.600/-ஐ பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பட்டியலின/பழங்குடியின வகுப்பினருக்கு ரூ.300/- விண்ணப்பக் கட்டணமாகும். (சாதிச் சான்றிதழின் சான்றொப்பமிடப்பட்ட நகல் அளிக்க வேண்டும்). விண்ணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் ***The Registrar, Tamil University, Thanjavur-613010*** என்ற பெயரில் தஞ்சாவூரில் மாற்றத்தக்க வகையில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட கேட்புக் காசோலையாக ***(Demand Draft Payable at Thanjavur)*** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை ***www.tamiluniversity.ac.in*** என்ற இணையதளத்தில் (***Online Application***) பதிவிறக்கம் செய்து விண்ணப்பத் தொகைக்கான வரைவோலையை இணைத்து பூர்த்தி செய்து நேரடிச் சேர்க்கைப் பெறலாம். க்கான

அஞ்சலில் பெற விரும்புவோர் மேற்கண்ட கட்டணத்துடன் தன் முகவரியிட்ட ரூ.25/- க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய A4 அளவுள்ள உறையைச் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்யும் முன்பு விவரக் கையேட்டை (Prospectus) தெளிவாகப் படிக்கவும்.

## VIII பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைச் சமர்பிக்கும் முறை

அ. பத்தாம் வகுப்பு மற்றும், பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

ஆ. பட்ட வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் பட்டச் சான்றிதழ்

இ. முதுகலை (M.A.,) / முது அறிவியல் (M.Sc.,) / ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) முனைவர் பட்ட (Ph.D.,) சான்றிதழ் மற்றும் பட்டச் சான்றிதழ்.

ஈ. மாற்றுச் சான்றிதழ் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ்

உ. இனச் சான்றிதழ்

ஊ. என்.சி.சி (NSS) (சி/பி) / என்.எஸ்.எஸ் (NCC) 7 நாள் சிறப்பு முகாமில் பங்கேற்றச் சான்றிதழ், தேசிய/ மாநில அளவிலான விளையாட்டில் பங்குபெற்றமைக்கானச் சான்றிதழ்.

எ. முன்னாள் இராணுவத்தினர் மகன் அல்லது மகள் என்பதற்கானச் சான்றிதழ்/ மாற்றுத் திறனுடையோர் (Differently Abled Persons) சான்றிதழ்.

ஏ. இளங்கல்வியியல் (பி.எட்.,) பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிப்பவராயின் மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஐ. கல்வியியல் நிறைஞர் (எம்.எட்.,) பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிப்பவராயின் மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களுடன் பி.எட்., பட்டச்சான்றிதழ் நகலையும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஒ. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் குறிப்பிட்ட தேதிக்குள் அளிக்கப்படாவிட்டாலும், வரையறுக்கப்பட்ட வடிவத்தில் இல்லையென்றாலும், முழுமையாக நிறைவு செய்யப்படாமல் இருந்தாலும், தவறான தகவல்கள் மற்றும் தவறான மதிப்பெண்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், சான்றொப்பம் (Attested) இடப்பட்ட இனச் சான்றிதழின் நகல் இணைக்கப்படாவிட்டாலும், அறிவுறுத்திய வகையில் முழுமையாகப் நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளது எனக் கருதப்பட்டாலும் எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்ப விற்பனை நாள் ***05.05.2025 முற்பகல் 10.00 மணி*** முதல்.
- விண்ணப்ப விற்பனை & சேர்க்கைக்கான கடைசி நாள் ***31.07.2025 பிற்பகல் 5.00 மணி வரை.***

**நிறைவு செய்த விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி**

---

**பதிவாளர் (பொ.)**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010**